செய்தி வெளியீடு எண்.28 நாள் 11.01.2017

**திருவள்ளூர் மாவட்டம், சமூக நலத்துறை சார்பாக மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதியுதவித் திட்டத்தின் கீழ், 900 பயனாளிகளுக்கு ரூ.3 கோடியே 20 லட்சத்திற்கான திருமண உதவித்தொகையும், 3600 கிராம் (450 சவரன்) தங்கத்தினை மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் திரு.பா.பெஞ்சமின் அவர்கள் வழங்கினார்.**

~~~~~

திருவள்ளூர் மாவட்டம், சமூக நலத்துறை சார்பாக மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதியுதவித் திட்டத்தின் கீழ், 900 பயனாளிகளுக்கு ரூ.3 கோடியே 20 லட்சத்திற்கான திருமண உதவித்தொகையும், 3600 கிராம் (450 சவரன்) தங்கத்தினை மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் திரு.பா.பெஞ்சமின் அவர்கள் இன்று (11.01.2017) வழங்கினார்.

திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் திருவள்ளூர், பூண்டி, கடம்பத்தூர் மற்றும் திருவாலங்காடு ஊராட்சி ஒன்றியங்களை சேர்ந்த 684 பயனாளிகளுக்கு ரூ. 2 கோடியே 34 லட்சத்தி 75 ஆயிரத்திற்க்கான திருமண உதவித்தொகையும், 2736 கிராம் (342 சவரன்) தங்கத்தையும் மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் பூவிருந்தவல்லி சட்டமன்ற உறுப்பினர் ஆகியோர் வழங்கினார்கள்.

வில்லிவாக்கம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் வில்லிவாக்கம் மற்றும் புழல் ஊராட்சி ஒன்றியத்தை சேர்ந்த 216 பயனாளிகளுக்கு ரூ. 85லட்சத்தி 25 ஆயிரத்திற்கான திருமண உதவித்தொகையும், 864 கிராம் (108 சவரன்) தங்கத்தையும் மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் அம்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் ஆகியோர் வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சிகளில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.வி.அலெக்ஸாண்டர் (அம்பத்தூர்), திரு.டி.ஏ.ஏழுமலை (பூவிருந்தவல்லி), மாவட்ட சமூக நல அலுவலர்(பொ) திருமதி.இரா.ஜெயஸ்ரீ மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருவள்ளூர்.**
~~~~~